**ARTICLE 35 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00087**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 47–51
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல்

**முனைவர்.ஜோதி ரவீந்திரன் அ**[1,*]
[1]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை அறிவியல் கல்லூரி, நாகர்கோவில்-4., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.ஜோதி ரவீந்திரன் அ — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

கி.ராஜநாராயணன் சிறுகதைகளான கதவு மாயமான்,ஒரு செய்தி, கரண்டு, ஆகிய சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் பற்றி இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது கி ராஜநாராயணன் தனது கரிசல் மண் கதைகளில் சமூகத்தின் அடித்தட்டு மற்றும் விளிம்பு நிலை மக்களின் வறுமை உழைப்பு சுரண்டல் சமூகப் புறக்கணிப்பு மற்றும் அவர்களின் மனிதநேயத்தை இயல்பாக தமது சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார் வறுமையின் காரணமாக சொந்தமாக ஒரு கதவு கூட இல்லாத ஏழை மக்களினுடைய நிலை மக்களை ஏமாற்றி பிழைக்கும் போலித்தனங்களும் அதற்கு பலியாகும் அடித்தட்டு மக்களும் மக்கள் தங்களின் வறுமையைப் போக்க பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாறுகின்ற சமூக அமைப்பு அடித்தட்டு மக்கள் மீதான அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறை மற்றும் நீதி மறுக்கப்படுதல் மனிதர்களின் குரல்கள் அதிகாரத்தின் முன் கண்டு கொள்ளப்படாமல் நிற்கின்ற நிலை மனிதர்களிடையே மின்சாரம் போன்ற நவீன வளர்ச்சி அறிமுகமாகும் போது ஏற்படும் அனுபவங்கள் சமூகத்தில் நவீன வசதிகள் தங்களுக்கு எட்டாத ஒன்று என்று அச்சமும் அதேசமயம் அதனை கண்டு குழந்தைத்தனமான வியப்பும் உள்ள சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்கள் வெறும் பரிதாபத்திற்கு உரியவர்களாக மட்டும் சித்தரிக்கப்படாமல் வறுமையிலும் நகைச்சுவை உணர்வும் அசாத்திய வாழ்வியல் திறனமும் கொண்ட மனிதர்களாகவே உயிர்ப்புடன் வாழ்கின்றனர் என்பதை கி.ராஜ நாராயணன் முன் வைத்துள்ள விதத்தை இவ்வாய்வு அணுகியுள்ளது.

**Keywords / திறவுச் சொற்கள்:** வாழ்க்கைப் போராட்டம் வாழ்வியல் இயல்பு; நவீனமயமாக்கல் பொருளாதாரம் நடைமுறை தேவைகள்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** அ, மு. ர. (2026). கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

கி.ராஜநாராயணன் சிறுகததைகளில் வருகிற பெரும்பான்மையான மக்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய விவசாயிகளான அடித்தட்டு மக்களாக அதாவது விளிம்பு நிலை மக்களாகவே இருக்கின்றனர். இவர்களின் உணர்வுகள்,,போராட்டங்கள்,முன்னேற்றங்கள், நடத்தைகள்,எல்லாம் பெரும்பாலும் சமூக எதார்த்தவியலின் அவலங்களை சுட்டிக் காட்டுவனாக அமைகின்றன.சமூகவியல் நோக்கில் இத்தகைய மக்களின் வாழ்க்கை ஏற்றத்தாழ்வுகளை கொண்டதாகவே காணப்படுகின்றது. ஒருபுறம் மித மிஞ்சிய வசதிகள் மற்றொரு புறம் அடிப்படை வசதிக்கு வள்ளல் படும் மக்கள் இது காலம் காலமாக தொடர்ந்து வரும் சமூகவியல் பார்வையாக

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

இருக்கின்றது.இந்த சமூக அவலங்களில் சிக்குண்டு பெரிதும் அல்லல் படுபவர்கள் விளிம்பு நிலை மக்களே ஆவர். கி.ராஜநாராயணன் இத்தகைய விளிம்பு நிலை மக்களின் இன்னல்களையும் போராட்டங்களையும் தமது சிறுகதையில் கருவாக வைத்து கதையை அமைத்துள்ளார்.எனவே கி ராஜநாராயணன் சிறுகதைகளில் வருகின்ற விளிம்பு நிலை மக்களின் நடப்பியல் போராட்டங்கள் செயல்பாடுகள் குறித்து ஆராய்வது ஆய்வின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. இவரது சிறுகதைகளில் வருகின்ற விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கைச் சூழலை வாழ்க்கை, நடைமுறை கல்வி தேவைகள் பொருளாதாரம் சமூகம் நவீனமாக்கல் என பல படிநிலைகளில் வகைப்படுத்தி ஆராயப்படுகின்றது.

## சமூகமும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலும்

தனிமனிதனின் கூட்டு நடவடிக்கையை சமூகம் மனிதன் கூட்டம் கூட்டமாக வாழும் மனிதன் தான் வகுத்த நெறிமுறைகள் இவற்றினாலே வீழ்த்தப்படுகின்றான். ஏனெனில் தனிமனித உணர்வுகள் எவையும் முதன்மை பெறுவதே இல்லை. குழுநிலையில் அமைகின்ற உணர்வுகள் மட்டுமே முதன்மை பெறுகின்றன.இத்தகைய நிலையில் ராஜநாராயணன் படைப்பில் அமையும் விளிம்பு நிலை மக்களின் உணர்வுகள் எவ்வாறு சமூகத்தால் நசுக்கப்படுகின்றன. அவர்களின் உணர்வுகள் சமூகநிலையை எட்டாம் இலையை தவிர்க்கப்படுவது எவ்வாறு என்பதை இவர் சிறுகதையின் வாயிலாக காணலாம். ஊர் முழுவதும் பஞ்சம் தாண்டவம் ஆடுகின்றது இச்சூழலில் குடும்பத் தலைவனும் ஏமாற்றிவிட்டு சென்று விடுகின்றான். நிலத்தீர்வை கட்டக் கூறி அரசு நெருக்குகின்றது.உணவுத் தேடல் பெரும் திண்டாட்டமான சூழலில் இக்கதையில் வரும் கதை மாந்தரிடம் உள்ள ஒரே பொருள் அவள் வீட்டு கதவு தான். இந்நிலையில் சமூகம் அவளுக்கு கொடுக்கும் நெருக்கடியை அதாவது விளிம்பு நிலை பெண்ணுக்கு சமூகம் கொடுக்கும் துன்பத்தை கதவு என்னும் சிறுகதை காட்டுகின்றது.

கதவு சிறுகதை வறுமையின்பிடியில் சிக்கித் தவிக்கும் ஒரு ஏழை எளிய குடும்பத்தின் துயரத்தை கதவின் வழியே விளக்குகிறது. அதிகாரத்தின் அடக்குமுறையும் வறுமையும் பஞ்சத்தின் காரணமாக வரி தீர்வை செலுத்த முடியாத ஏழை குடும்பத்தின் வீட்டின் கதவை தலையாடரி கழற்றிக் கொண்டு எடுத்துச் சென்று விடுகிறான். ஏழைகளின் குரல் அதிகார வர்க்கத்தின் முன் எடுபடுவதில்லை என்பதை இந்த கதை காட்டுகின்றது. பாதுகாப்பின்மையும் இல்லாத கதவு இல்லாத வீட்டில் வாடைக்காற்றும் குளிர்ந்த காற்றும் பேசுவதால் கதவற்று வீட்டின் பாதுகாப்பு இல்லாத தன்மை காரணமாக அந்த குடும்பத்தில் உள்ள ஒரு கைக்குழந்தை இறந்து போகின்றது. சிறுவர்களின் கனவாக அந்த கதவு இருந்தது அந்த கனவில் சிறுவர்கள் ஏறி விளையாடுவதும் அது வெறும் மரக்கட்டை அல்ல தங்களுடைய சொர்க்கம் என்று விளையாட்டு நிலமாகவும் கனவு உலகமாகவும் திகழ்கின்றது.அந்த கதவு ஆனால் அந்த கதவு அதிகார வர்க்கத்தினாலானால் கலட்டப்பட்டு ஊர்சாவடியில் கழற்றி வைக்கப்பட்ட கதவை கண்டு கட்டிப்பிடித்து கொள்ளும் காட்சி விளிம்பு நிலை சிறுவர்களின் பறிக்கப்பட்ட உரிமையையும் இயக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

## விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் கனவு

வாழ்க்கையும் நம்பிக்கையும் இருத்துப்பாதை போன்று என்றும் இணையாகவே செல்ல வேண்டும் ஆனால் ராஜநாராயணம் சிறுகதையில் வருகின்ற விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை பொருளாதாரமே நிர்ணயம் செய்கின்றது. நம்பிக்கை என்பது நசுங்கிப் போய் விடுகின்றது பொதுவாக இவர்களின் வாழ்க்கை போராட்டங்கள் உணவு போராட்டத்தாலேயே அர்த்தமற்று போய்விடுகின்றது.அடிப்படை தேவையே எதிர்கால திட்டமாய் அமைந்திருக்கும் விவசாயத்தை ஒட்டியதாக அமைந்து கனவுகளை கலைந்து விடுகின்றது. இதனை மாயமான் சிறுகதை விளிம்பு நிலை விவசாயிகள் தொழிலாளர்களின் நிறைவேறாத ஆசைகளையும் வாழ்க்கை போராட்டங்களையும் பிரதிபலிக்கின்றது.

“ மழை மேகங்கள் இல்லை மழை பெய்வதாக இல்லை வெள்ளை வெயில் அடித்து என்றாவது ஒருநாள் கருமேகங்கள் கூடி சூரியனை பலமாக பந்தல் போட்டு. சொல் மேகங்கள் கணம் தாங்காது இப்போது பூமியில் இறங்கிவிடும். திடீரென்று எங்கிருந்தோ பெருங்காற்று வந்து மேகங்களை எல்லாம் வாய் சுருட்டுவது போல் சுருட்டிக்கொண்டு. ஜனங்கள் முணுமுணுப்பார்கள் “.. என்ற கதையின் உரையாடல் மாயமான சிறுகதையில் விவசாய மக்களின் வாழ்க்கை அவர்களின் போராட்டமாகவே இருக்கின்றது என்பதை காட்டுகின்றார். மாயமான் சிறுகதை விளிம்பு நிலை விவசாயிகள் தொழிலாளர்கள் நிறைவேறாத ஆசைகளையும் போராட்டங்களை தன் முழு போராட்டமாக கொண்டுள்ளனர்.ராமாயணத்தில் சீதைக்கு மாயமான் எவ்வாறு எட்டா கனியாக இருந்ததோ அதேபோல் வறுமையில் பாடும் எளிய மக்களின் ஆசைகளும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற விருப்பங்களும் மாயமான் போல எட்டாத இலக்காகவே இருக்கின்றன. பஞ்சமும் பிழைப்புக்கான போராட்டமும் மழை பொய்த்துப் போகும் கரிசல் மண்ணில் வாழ்வுதாரத்திற்காக போராடும் மக்களின் இயலாமையையும் மனித மனங்களின் போராட்டத்தை ராஜநாராயணன் இக்கதையில் சித்தரித்து உள்ளார்.

## கல்வியும் விளிம்பு நிலை மக்களும்

கல்வி அறியாமை இருளை அகற்றும் விளிம்பு நிலை மக்களிடையே ஆடம்பரமான ஒன்றாகவே கல்வி கருதப்பட்டு வருகின்றது கல்வியறிவு பெற்றுவிட்டால் தன் விவசாய தொழில் இருக்கு வாரிசு இல்லாமல் போய்விடும் என்று விளிம்புநிலை மக்கள் எண்ணுவர் இதன் காரணமாய் அடித்தட்டு விளிம்பு நிலை மக்களிடையே ஒருவன் கல்வியறிவு பெறுவது என்பது மிக அரிதான நிலையாகும் இந்நிலைக்கு காரணம் அறியாமை என்பதை காட்டிலும் பொருளாதாரமே முக்கிய காரணமாக இருக்கின்றது. வயிறு பசித்த நிலையில் கல்வி அறிவு திறன் அரிதான நிலையாக இருக்கும் என்பர் விளிம்புநிலை மக்களின் கல்வி அறிவை பறிப்பது பொருளாதாரம் மட்டுமின்றி அலட்சியப் போக்கும் காரணமாக இருக்கும் இதனை ஒரு செய்தி- சிறுகதையில் ராஜநாராயணன் கதை மாந்தர்கள் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

“படிச்சி என்ன செய்ய மண்டகப்படி கணக்கு எழுத போறாங்களா?
முன்னெல்லாம் இப்படியே கேட்டுக் கொண்டிருந்தார்கள் “
“படிச்சி என்ன செய்ய கலெக்டர் வேலைக்கு போக போறாங்க “

"காடுகள போயி பாடுபட்டா வயித்துக்கு கஞ்சி கிடைக்கும் " விளிம்பு நிலை மக்கள் கல்வியை விட விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது இச்சிறுகதை மூலம் தெளிவாகின்றது இதற்கு காரணமாக பொருளாதாரமும் வறுமையும் காரணமாக இருக்கின்றது.

## நவீன மயமாக்கல்,பொருளாதார தேவைகள் விளிம்புநிலை மக்கள்

தனிமனித தேவையும் சமூக முதன்மையும் காரணமாக இருப்பது பொருளாதாரமாகும் பொருளாதாரையே பற்றாக்குறை நிலையிலேயே தொடர்ந்து இருக்கின்றது அடிப்படை தேவையே அவர்களுக்கு சீராக கிடைப்பதில்லை அடிப்படைத் தேவையை பெறவே விளிம்பு நிலை மக்கள் உயிர் போராட்டம் நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர் பொதுவாக வறுமை நிலை உள்ளவர்களாக இருப்பது மட்டுமின்றி விவசாயக் குடியினராகவும் ராஜநாராயணன் கதைகளில் விளிம்பு நிலை மக்கள் இருந்து வருகின்றனர்.

தேவையே மனிதன் வாழ்வை நிர்ணயிக்கின்றது தேவை மிகையாகும் போது மனித வாழ்வில் தேடல் மிகையாக அமைகின்றது இதனால் விளிம்பு நிலைமக்களின் வாழ்வியலை பொறுத்து மாற்றம் பெற்று காணப்படுகின்றது.விளிம்பு நிலை மக்கள்

தேவைகள் இன்றி அமையாத தேவையான உணவு உடை இருப்பிடம் ஆகிவிட்டதை கொண்டதாகவே இருக்கும். விளிம்பு நிலை மக்களின் அடிப்படைத் தேவைகள் பெரிதும் புறக்கணித்துக் கொண்டு வருவதாக ராஜநாராயணன் தமது சிறுகதைகளில் குறிப்பிடுகின்றார். மனிதனின் வாழ்க்கை தேவைகள் என்பது பெரும்பாலும் மாறுதலுக்கு உட்பட்ட ஒன்றாகும். விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் போராட்டம் அத்தியாவசிய தேவைக்கான உயிர் போராட்டமாகும்.' கரண்டு ' என்ற சிறுகதையில் சோளம் முளை கட்டுவதற்கு மின்சாரம் தேவைப்படுகிறது மின்சாரம் பெறுவதற்கு சென்ற கதை மாந்தர் பட்ட அவமானங்கள் ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். இச்சிறுகதையில் வரும் கதை மாந்தர் நாள் முழுவதும் கரண்ட் வேண்டும் என்று முதலில் ஒரு சிறிய அதிகாரியை சென்று பார்க்கின்றார் அவரிடம் எந்த கதையும் பலிக்கவில்லை.அதன் பிறகு பெரிய அதிகாரியிடம் சென்று நாள் முழுவதும் கரண்ட் வேண்டும் என்று கேட்கின்றார் கேட்டு அதற்கான ஒரு மனுவையும் அந்த அதிகாரியிடம் கொடுக்கின்றார். ஆனால் அந்த அதிகாரி அந்த மனுவை வாங்கிப் பார்க்காமலே 'என்ன 'என்று எரிச்சலோடு கேட்கின்றார் இப்பொழுது முடியாது எங்களுக்கு மேலே இருந்து எந்த ஆர்டரும் வரவில்லை ஸ்டிக்டா ஆர்டர் வந்திருக்கின்றது என்று சொல்லி அவரை புறக்கணித்து விடுகின்றார். இவ்வாறு விளிம்பு நிலை மக்கள் நவீன மயமாக்களில் முதன்மையாக உள்ள மின்சாரத்தைக் கூட தங்களால் பெற இயலாத நிலையை தன் கதையில் தத்ரூபமாக வெளிக்காட்டி உள்ளார்.

## முடிவுரை

கி ராஜநாராயணனின் மாயமான்,கதவு, ஒரு செய்தி,கரண்டு ஆகிய சிறுகதைகள் கரிசல் மண்ணின் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை யதார்த்தமாக வெளிப்படுத்துவதாக உள்ளன. இக்கதைகள் வாயிலாக பொருளாதார சுருண்டல் வறுமை மற்றும் நவீன உலகில் இயந்திரத்தனமான மாற்றங்கள் மக்களின் மீது திணிக்கும் தாக்கங்கள்

ஆகியவை இக்கதையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.மாயமான் கதையில் வறுமையின் கோரத்தால் அரசாங்க உதவிகளின் சிக்கல்களால் தவிக்கும் குடும்பத்தின் நிலையும், கதவு கதையில் வரி பாக்கிக்காக குடிசையின் கதையே பறிபோகும் அவலமும் விளிம்பு நிலை மனிதரகளின் துயரங்களை உணர்த்துகின்றன. ஒரு செய்தி மற்றும் கரண்டு போன்ற கதைகள் கிராமப்புற எளிய மக்களின் வாழ்க்கைக்குள் தொழில்நுட்பமும் நவீன வளர்ச்சியும் நுழையும் போது ஏற்படும் முரண்பாடுகளையும் அவற்றை எதிர்கொள்ளும் குழப்பங்களையும் காட்டுகின்றன. எத்தகைய துயரங்களும் ஏமாற்றங்களும் விளிம்பு நிலை மக்களை சூழ்ந்தாலும் அவர்களின் சுயமரியாதை பண்பாடு மற்றும் வறுமையிலும் மலரும் சில செய்திகளை ராஜநாராயணன் தனது கதைகளில் அழகாக வெளிப்படுத்தி உள்ளார்.

சமூகத்தில் அடித்தட்டு மக்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டும் அவர்களின் தேவைகள் சமூக மதிப்பை பெறுவது மிக இன்றியமையாத ஒன்றாகும்.விளிம்பு நிலை மக்களின் பொருளாதார நிலை மீது சமூகம் தனிக்கவனம் செலுத்த வேண்டும் இதனால் சமூகத்தின் பின்னடைவு தவிர்க்கப்படும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. ராஜநாராயணன். கி. ராஜநாராயணன் சிறுகதைகள் முழுத்தொகுதி,அன்னம் பதிப்பகம், சிவகாசி.
2. பெருமாள்.அ.கா.கரிசல்காட்டு பண்பாடும் மக்களும்,தமிழினி பதிப்பகம்,சென்னை.
3. சண்முகசுந்தரம்.சு.தமிழ் நாவல்கள் மற்றும் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்கள், பாவை பப்ளிகேஷன்,சென்னை.
4. பத்மநாபன்.சே.நவீன தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலை மனிதர்கள், காவியா பதிப்பகம், சென்னை.
5. தமிழவன்.நவீன தமிழ் இலக்கிய திறனாய்வு,அடையாளம் பதிப்பகம், திருச்சி.

© 2026 முனைவர்.ஜோதி ரவீந்திரன் அ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..